செ.வெ.எண்.58 நாள்.24.03.2017.

**திருநெல்வேலி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 11 விவசாயிகளுக்கு அரசு மானியமாக ரூ.27.30 இலட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.**

---

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (24.03.2017) விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் தங்களது கோரிக்கை மனுக்களை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களிடம் வழங்கினார்கள்.

முன்னதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ரூ.5,86,000/– மதிப்பில் 6 விவசாயிகளுக்கு அரசு மானியமாக ரூ.2,10,000/– மதிப்பிலான ரொட்டேவேட்டர் இயந்திரங்களையும், கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் கறிக்கோழி வளர்ப்பிற்கு ரூ.10,75,000/– மதிப்பில் அரசு மானியாக ரூ.2,68,750/– மதிப்பில் ஒரு விவசாயிக்கும், கறிக்கோழி வளர்ப்பிற்கு ரூ.10,75,000/– மதிப்பில் அரசு மானியாக ரூ.2,06,250/– மதிப்பில் ஒரு விவசாயிக்கும், 3 மூன்று விவசாயிகளுக்கு முதியோர் உதவித் தொகை பெறுவதற்கான ஆணைகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

பின்னர், 2014ம் நிதியாண்டில், திருநெல்வேலி மாவட்டத்தில் வேளாண்மைத் துறையின் மூலம் முன்னாள் படைவீரர் நல நிதி அதிகமாக வசூலித்தமைக்காக தமிழ்நாடு தலைமைச் செயலாளர் அவர்களின் விருது மற்றும் பாராட்டுச் சான்றிதழினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்களிடமிருந்து வேளாண்மைத் துறை துணை இயக்குநர் திரு.இல.பெருமாள் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

கடந்த மாதத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மொத்தம் 289 மனுக்கள் விவசாயிகளிடம் பெறப்பட்டது. இவற்றில் வேளாண்மைத் துறையின் சார்ந்த 184 மனுக்களும், வேளாண்மை துறை சாராத 105 மனுக்களும் பெறப்பட்டு, மனுக்களுக்கான பதில்கள் விவசாயிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்கள்.

அதனைத் தொடர்ந்து விவசாயிகளிடம் கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பெற்றுக் கொண்டு, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி உடனடி நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், வேளாண்மைத் துறை இணை இயக்குநர் திரு.கனகராஜ், துணை இயக்குநர் திரு.பெருமாள், தோட்டக்கலைத் துறை துணை இயக்குர் திரு.கண்ணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் திரு.ராஜேந்திரன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.எஸ்.அழகர்சாமி உள்பட அரசு அலுவலர்கள், விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.